தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை 6

ந.க.எண். 00701 / சி3 / இ1 / 2022 நாள்.06.04.2022

பொருள்: பள்ளிக் கல்வி - 2021-22 ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் / அலகு விட்டு அலகு மாறுதல் முன்னுரிமை ஒன்றியம் (Priority Block) வெளியிடுதல் - சார்பு.

பார்வை: 1)அரசாணை (நிலை) எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1)துறை நாள்.17.12.2021

2)தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.25154/அ1/இ2/2021 நாள்.22.1.2022

-0-

பார்வை-1ல் காணும் அரசாணையின்படி 2021-22ம் கல்வியாண்டிற்கு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு /அலகு விட்டு அலகு மாறுதல் கலந்தாய்வு நெறிமுறைகள் சார்பாக ஆணை வெளியிடப்பட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பள்ளிக் கல்வித் துறையில் உள்ள அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தொடக்கக் கல்வி அலகில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் சார்பான நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்களில் ஒட்டுமொத்த ஒன்றியங்களில் அதிகளவு எண்ணிக்கையில் காலிப்பணியிடம் உள்ள ஒன்றியங்களிலிருந்து 10 விழுக்காடுகளுக்கு மிகாமல் முன்னுரிமை ஒன்றியங்களாக (Priority Block) தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டு கீழ்க்கண்டவாறு 40 ஒன்றியங்கள் முன்னுரிமை ஒன்றியங்களாக அறிவித்து பார்வை-2ல்காணும் செயல்முறைகளின்படி ஏற்கனவே முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வஎண் | மாவட்டம் | முன்னுரிமை ஒன்றியம் |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் | வேதாரண்யம், கீழையூர் |
| 2 | திருவாரூர் | திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை |
| 3 | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம், திருக்கோயிலூர், ரிஷிவந்தியம் உளுந்தூர்பேட்டை, தியாகதுருகம் |

| | | |
|---|---|---|
| 4 | விழுப்புரம் | காணை, மேல்மலையனூர், முகையூர், திருவெண்ணெய்நல்லூர் |
| 5 | ராணிப்பேட்டை | நெமிலி |
| 6 | திருவண்ணாமலை | போளூர், ஆரணி, செங்கம், தண்டராம்பட்டு, ஜவ்வாதுமலை, வெம்பாக்கம், கலசப்பாக்கம், செய்யாறு |
| 7 | கிருஷ்ணகிரி | தளி, சூளகிரி, கெலமங்கலம், வேப்பனபள்ளி பருகூர், மத்தூர், ஊத்தங்கரை |
| 8 | தருமபுரி | பென்னாகரம், பாலக்கோடு |
| 9 | திருவள்ளூர் | ஆர்.கே. பேட்டை, கும்மிடிப்பூண்டி |
| 10 | நீலகிரி | கூடலூர் |
| 11 | ஈரோடு | தாளவாடி |
| 12 | கடலூர் | நல்லூர் |
| 13 | கோயம்புத்தூர் | வால்பாறை |
| 14 | நாமக்கல் | கொல்லிமலை |
| 15 | வேலூர் | அணைக்கட்டு |
| 16 | திருப்பத்தூர் | கந்திலி |

மேற்காண் முன்னிமை ஒன்றியங்களுக்கு மாறுதல் பெறும் ஆசிரியர்கள் 3 ஆண்டுகள் அவ்வொன்றியத்தில் பணிபுரிந்தால் அவர்களுக்கு அடுத்து வரும் (31.12.2024க்கு பின்) பொது மாறுதல் கலந்தாய்வில் அரசாணை நிலை எண்.176 நாள்.17.12.2021 விதி 2(d) Vன் கீழ் முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் முன்னுரிமை ஒன்றியங்கள் சார்பான தகவலை அலகு விட்டு அலகு மாறுதல் கோரும் / துறை மாறுதல் கோரும் அனைத்துநிலை ஆசிரியர்களின் கவனத்திற்கு தெரியப்படுத்துமாறும், இவ்விவரத்தினை கலந்தாய்வு நடைபெறும் நாளில் தகவல் பலகையில் ஒட்டிவைத்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையருக்காக

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)